திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, ஆண்டொன்றுக்கு இரண்டு சீருடைகளை வழங்குவதாகத் தெரிகிறது. அது போதாது என்று தொழிற்சங்கத்திலிருந்து ஏதாவது கோரிக்கை வந்துள்ளதா ? ஆம் என்றால் அது எந்த அளவுக்குப் பரிசீலனையில் இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் கூறுவார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அது பற்றிய விவரம் என்னிடத்திலே இல்லை.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, வெள்ளிவிழா சுதந்திர தினவிழா கொண்டாடுகின்றபொழுது கதரை மறந்துவிட வேண்டாம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதே மாதிரி கைத்தறி நெசவுத் தொழிலும் நல்ல நிலைமையில் இல்லாத காரணத்தினால் எப்படி கதர்தொழில் நசித்துவிடாமல் இருக்க அந்தத் துணிகளை வாங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறதோ அதைப்போன்று கைத்தறித் தொழிலும் நசித்துவிடாமல் இருக்கின்ற அளவில் அதையும் வாங்குவதற்கு அரசு ஏற்பாடுகளைச் செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை அரசால் பரிசீலிக்கப்படும்.

Railings in bus stops.

* 144. *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Transport be pleased to state :

(a) whether it is a fact that railing have to be fixed at bus stops at Madras City; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ), (இ) :—சென்னை மாநகரில் நெரிசல் மிகுந்த பேருந்து நிறுத்துமிடங்களில் பயணிகள் வரிசையாக நின்று ஒழுங்காகப் பேருந்திற்குள் ஏற வகை செய்யும் பொருட்டு, பேருந்து நிறுத்து மிடங்கள் ஐம்பதில் சிமிட்டிக் கிராதிகள் அமைக்கப்பட்டுள்ளன.

THIRU N. DENNIS : Some railings are away from bus stop. May I know whether steps will be taken to rectify this anomaly?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, குறிப்பிட்டு அந்தத் தகவல்களை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அளித்தால் அதுபற்றி அரசாங்கம் நடவடிக்கை எடுக்கலாம்.

1972 ஆகஸ்ட் 17]

THIRU K. M. SUBRAMANIAM: Are the Government aware that many of the railings in platforms are removed by some shop-keepers and thrown away in the streets and no action is taken in many places. In many places they are simply laying down there.

THE HON. THIRU S. RAMACHANDRAN: The reply given by me just now is also sufficcient to the interpellation raised by the hon. Member.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, சென்னை நகரிலே பல்வேறு பஸ் ஸ்டாப்களில் நிழற்குடைகள் இல்லாமல் இருக்கின்றன. அதனால் பயணிகள் வெயிலில் மணிக்கணக்கில் நிற்க வேண்டியிருக்கிறது. ஆகவே எல்லா பஸ் ஸ்டாப்புகளிலும் நிழற்குடைகள் அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, எல்லா பஸ் ஸ்டாப்புகளிலும் நிழற்குடைகள் அமைக்க வேண்டுமென்றால் ஏராளமான செலவு ஆகும். இப்பொழுது நிழற்குடைகள் அமைப்பதற்கு மாநகராட்சி மன்றம் உதவி செய்கிறார்கள். அது மட்டுமல்லாமல் நன்கொடையாளர்கள் பெரும் அளவுக்கு முன்வந்து உதவி செய்கிறார்கள். ஆகவே மக்களும் தங்களுடைய பங்கை கொடுத்துப் பகிர்ந்து கொண்டால் எல்லா இடங்களிலும் அமைத்து விடலாம். மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் இதற்கு எல்லாம் உதவ முன் வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: பஸ் தொழிலிலே பெருத்த லாபம் எதிர்ப்பார்ப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆகவே அதைப் பயன்படுத்தி இந்த நிழற் கொடைகள் அமைத்துக்கொள்கின்ற வகையில் அதற்குப் ப்ரையாரிடி கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, நாம் பேசிக்கொண்டிருப்பது பல்லவா போக்குவரத்துக் கழகத்தைப்பற்றி.

திரு. ஏ. எம். இராஜா : தலைவர் அவர்களே, நிழற்குடைகள் சென்னை நகரத்திலே இருக்கின்றவர்களுக்குப் பயன்படுகின்றன. சென்னை நகரத்திலே பஸ்களிலே செல்கின்ற பயணிகளிடத்தில்—எப்படி பஞ்சாயத்து யூனியன் டெவலப்மெண்ட் டாக்ஸ் என்று போடுகிறதோ—அதைப்போன்று ஒரு வரியை வாங்கி அந்த வருமானத்திலிருந்து நிழற்குடைகளை அமைக்க போக்குவரத்துத் துறை முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அப்படி ஒரு யோசனை இப்பொழுது இல்லை.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, நெரிசலைப் போக்குவதற்கு நிழற்குடைகள் அமைக்கப்பட்டாலும், மாடிபஸ்களை அதிகமாக்கி சீக்கிரமாகப் பயணிகளை ஏற்றிச் செல்வதற்கு அரசு ஏற்பாடுகளைச் செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாடி பஸ்கள் பரீட்சார்த்தமாகப் பயன்படுத்தப்படுகின்றன. பம்பாயிலே பயன்படுத்துகிறார்கள். இதிலே இருக்கின்ற ஒரு சங்கடம் என்னவென்றால் வேண்டிய பொருள்கள் கிடைக்கவில்லை, அவை வெளிநாட்டிலிருந்துதான் பெற வேண்டிய நிலைமையில் நாம் இன்னும் இருக்கிறோம்.

THIRU R. PONNAPPA NADAR : May I know from the Hon. Minister whether there is any type-design for these bus shelters?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : முக்கியமாக டெர்மினஸ் இருக்கின்ற இடங்களிலே டைம்டேபிள்ஸ் வைக்கப்படுகின்றன.

We have got certain type designs for erection of these bus shelters.

திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, சீரணியின் சார்பாக எத்தனை நிழற்குடைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : சீரணியின் சார்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பிறந்தநாளையொட்டி நல்ல அளவுக்கு 48 இடங்களில் நிழற்குடைகளை அமைத்துத் தந்திருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.